**21.03.2025**

**அ.வ.எண்.194/2015**

**பி.சா.3 வசந்த்குமார் அவர்களின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. பி.சா.ஆ.13ல் சொத்து விவரத்தின் எனது தகப்பனார் பெயரில் கண்டுள்ளதால் மட்டுமே தாவா சொத்து எனது தகப்பனாருக்கு சொந்தமானது என்று சொல்ல முடியாது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.13 மற்றும் பி.சா.ஆ.14 தாவா சொத்திற்கு சம்பந்தமில்லாத ஆவணங்கள் என்பதால் அவை வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் வார்டு எண்.16. பி.சா.ஆ.6ல் உள்ள வரி ரசீது நகல்களில் வார்டு எண்.19 என்று கண்டுள்ளது என்றால் சரிதான். அதை தற்போது மாற்றியிருப்பார்கள். 2019ம் வருடம் தாவா சொத்தில் செங்கற்களால் கட்டப்பட்ட வீடுகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். இன்றைய தேதிவரையிலும் தாவா சொத்தில் கல் வீடு எதுவும் இல்லை என்றால் சரிதான்.

2. பி.சா.ஆ.17 மற்றும் பி.சா.ஆ.18 ல் வார்டு எண்.13 என்று கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 2 ஆவணங்களிலும் சொத்தின் வகைபாடு கட்டிடம் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 2 ஆவணங்களிலும் 28.11.2023 அன்று வரி செலுத்தபட்டுள்ளது என்றால் சரிதான். 28.11.2023 அன்று தாவா சொத்தில் வீடு இல்லை என்றால் சரிதான். எனவே பி.சா.ஆ.17 மற்றும் பி.சா.ஆ.18 தாவா சொத்திற்கு செலுத்தப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. கட்டிடமே இல்லாத

சொத்திற்கு நான் வரி செலுத்தியுள்ளேனா என்றால் ஆமாம். பி.சா.ஆ.6 மற்றும் பி.சா.ஆ.7 மற்றும் பி.சா.ஆ.8 வெவ்வேறு சொத்துகளுக்கு செலுத்தப்பட்ட வரி ரசீதுகள் என்றால் சரியல்ல. முன்பு வார்டு எண்.19 என்று இருந்ததை வார்டு எண்.13 ஆக மாற்றியுள்ளார்கள். எப்போது மாற்றினார்கள் என்றால் தெரியாது.

3. பி.சா.ஆ.3 ல் வார்டு எண்.19 என்று கண்டுள்ளது என்றால் சரிதான். வார்டு எண்.19 என்று கண்டுள்ள ரசீதுகள் அனைத்தும் எனது தகப்பனார் பெயரில் உள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.17 எனது தகப்பனார் பெயரில் வார்டு எண்.13 க்கு செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒரே தேதியில் வழங்கப்பட்ட பி.சா.ஆ.17 மற்றும் பி.சா.ஆ.18 ஆவணங்களில் பி.சா.ஆ.17 ல் வார்டு எண்.13 க்கு எனது தகப்பனார் பெயரிலும் பி.சா.ஆ.18 ல் வார்டு எண்.13 க்கு எனது பெயரிலும் வரி செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.17 மற்றும் பி.சா.ஆ.18 தாவா சொத்திற்கு சம்பந்தமில்லாத ஆவணம் என்றால் சரியல்ல.

4. பி.சா.ஆ.2 முதல் பி.சா.ஆ.18 வரை உள்ள ஆவணங்கள் தாவா சொத்திற்கு சம்பந்தமில்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.247/2015 தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் வாதி தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.194/2015 அனுமதிக்கப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. தாவா சொத்து வாதிக்கு சொந்தமான சொத்து என்றாலும் எவ்வித உரிமையும் இல்லாமல் எனது தகப்பனார் எனக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம்

செல்லதக்கதல்ல என்றாலும் சரியல்ல.